Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

# பல்லவர்கால கோயிற்கலையின் புதுமையும், தாக்கமும்

முனைவர் ரா. பிரபா
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
பச்சையப்பன் மகளிர் கல்லூரி, காஞ்சிபுரம்.
prapasairam@gmail.com

14

**ஆய்வுச்சுருக்கம்**

தமிழரின் மொழி வரலாற்றில் சங்ககாலம், சங்கமருவிய காலம், நீதிக்காலம், காப்பியக்காலம், பக்திக்காலம் போன்ற இலக்கிய வகைமையோடும், ஆளுமைச் செய்த அரசர்கள், மன்னர்களின் பெயர் வகைமையோடும் வரையறுக்கப்பட்டுள்ளன. இக்கால வரையறையெல்லாம் மொழி செய்யுள் வடிவம் பெற்ற பிறகு பிரித்தறியப்பட்டவை. ஆனால் அவற்றிற்கு முன்பே மொழி செய்யுள் வடிவம் பெறுவதற்கு முன்னரே நாட்டுப் பாடல்களும், வாய்மொழி இலக்கியங்களும் தோற்றம் பெற்றுவிட்டன. இவ்விலக்கிய வரலாற்றில் ஏறக்குறைய கி.மு.ஐந்தாம் நூற்றாண்டில் தொடங்கிய இலக்கிய மரபானது பல்வேறு பரிமாணங்களைப் பெற்று, கி.பி.மூன்றாம் நூற்றாண்டு முதல் ஒன்பதாம் நூற்றாண்டு வரை தமிழக ஆட்சி வரலாற்றில் பல்லவர்களின் வசம் இடம் பிடித்தது. (தமிழக வரலாறு மக்கள் பண்பாடும் ப.189 கே.கே.பிள்ளை) இவ்வரசாட்சியில் பல்லவர்கள் தலையாக கொண்டு குடியேறிய இடம் காஞ்சிபுரம் ஆகும். இவ்வரசர்கள் பல நாடுகளையும் வென்று ஆட்சி புரிந்து வந்தபோது பல்வேறு பாறைக் கோயில்களும், குகைக்கோயில்களும், கற்றளிகளும் உருவாக்கினர். இவ்வுருவாக்கத்தின் சமயத் தாக்கங்களையும், கட்டடக் கலையில் தொழில்நுட்பத்தையும் வளர்த்தெடுத்தனர்.

இதன் தாக்கமாகப் பல்வேறு சைவசமய பெரியவர்களுமான நாயன்மார்களும், வைணவ சமய முன்னோரான ஆழ்வார்களும் தோன்றி இறைவன் மீது அளப்பரிய காதல் கொண்டு பல்வேறு பாடல்களைப் பாடி வரலாற்றில் இடம் பிடித்துள்ளனர் இதுவே பக்தி இலக்கியமாகப் பிரவாகம் எடுத்துள்ளது. ஆகவே சிந்தனையும், தொழில்நுட்பமும் மற்றைவைகளைவிட பல்லவர்களின் ஆட்சிக் காலத்தே சிறந்தோங்கியே நின்றது என்பதே இவ்வாய்வின் செல்நெறியாகும்.

**திறவுச் சொற்கள்**

பல்லவர்கள், கலைநுட்பம், பக்தி இலக்கியம் மொழி வரலாறு, காஞ்சிபுரம் குகைக்கோயில்கள், கற்றளிகள்.

**முன்னுரை**

சங்க இலக்கியம் தொடங்கிய காதலும், வீரமும் கருப்பொருளாகக் கொண்டு இயற்றப்பட்டு பிறமொழியாளர்கள், களப்பிரர்களின் வருகையால் நீதி இலக்கியம் பல தோன்றி திருமந்திரம் போன்ற நூல்கள் எழுந்தன. பிறகே தமிழின வரலாற்றில் பல்லவர்கள் கி.பி.300 முதல் கி.பி.600 காஞ்சிபுரத்தை

தலைநகரமாக ஆட்சிப்புரிந்து தோற்றம் கண்டனர். தொன்மைக் காலத்தில் இலை தழைகளை உடுத்திக்கொண்டு மரங்களடியில் வாழ்ந்துகொண்டு வந்த மனிதன் கட்டிடக் கலையின் முதல் முறையாக மரத்தினால் குடில் அமைத்தும், மண்ணால், செங்களால் கட்டிடங்களை உருவாக்கி வாழ்ந்து வந்தான்.

இந்த பரிமாண வளர்ச்சியின் முயற்சியால் கோயில்களும், செங்களால் கட்டப்பட்டது. அதன் ஆயுட்காலம் குறைந்த அளவே கொண்டு சில நூற்றாண்டில் அழிவு நிலைக்கு ஆட்பட்டுவிட்டது. இக்கோயில் கலை மரபில் இருந்து மாறி பல ஆயுதங்களின் உதவியுடன் பாறையைக்குடைந்து குகைக்கோயில்களும், ஒற்றைக் கல்லை செதுக்கி ஒற்றைக்கல் கோயில்களும், கற்களை அடுக்கி கற்றள்களும் அமைக்கப்பட்டன. இக்கட்டமைப்பு தொழில்நுட்பம் கட்டிடக்கலை மரபில், ஏற்படுத்திய புதுமையையும், தாக்கத்தையும் மீளாய்வு செய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**பல்லவர் என்னும் வலிமைச் சொல்**

பல்லவர் என்பதற்கு பல்வேறு ஆராய்ச்சி முடிவுகளை அறிஞர் கூறி வருகின்றனர். குறும்பர் மணி பல்லவர், யாழ்பாணத்தவர், ஆந்திரர், தமிழர், ஆரியர் இதுபோன்ற பெயர்களுடன் திறனாய்வு செய்துள்ளனர்.

பால் + அவர் = பாவலர் என்றும் அப்பெயர் நாளடைவில் பல்லவர் என்று மாறியிருக்கலாம் என்றும் குறும்பர் இனத்தவரே பல்லவர் என்று ஒருசாரர் கூறுகின்றனர்.

மு.இராசமாணிக்கனார், (பல்லவப் பேரரசர் ப.6 )

இவ்வினத்தவரை பூர்வக்குடிகள் என்றும், நாட்டில் இருந்து குடியேறியவர்கள் என்றும் இருவேறு கருத்துக்கள் நிலவுகின்றன. ஆனால் பல்லவ மன்னர்கள் தமிழகத்தில் சிறப்பானதொரு ஆட்சிமுறைச் செய்தனர் என்னுமிடத்து சான்றுகள் பலவாறு நமக்கு கிடைத்துள்ளன. அவற்றில் இலக்கியங்கள், பட்டயங்கள், கல்வெட்டுகள், செப்பேடுகள், நினைவுச் சின்னங்கள் கிடைத்துள்ளன. இவைகளை மகேந்திவாடி, தளவானூர், பல்லவர் திருச்சிராப்பள்ளி, திருகழுக்குன்றம், வல்லம், மாமண்டூர், மண்டகப்பட்டு, சித்தன்னவாசல், மாமல்லபுரம் ஆகிய இடங்களில் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

**பல்லவ மன்னனின் ஆட்சி**

வடக்கே நெல்லூருக்கும், தெற்கே காவேரி நதிக்கும், மேற்கே மேற்குத் தொடர்ச்சி மலைக்கும் இடைப்பட்ட பகுதியே தொண்டை மண்டலம் இதையே தலைநகராகக் கொண்டு இம்மன்னன் ஆட்சிபுரிந்து வந்தான் என்றும் இவர்களின் ஆட்சி தமிழகத்தின் புத்துணர்ச்சிக் காலம் என்றும் கூறலாம்.

பல்லவர்களில் சிவஸ்கந்தவர்மன் (கி.பி.4) விஷ்ணுகோபன் (கி.பி.350-375) சிம்மவர்மன் (கி.பி.436) இரண்டாம் சிம்மவர்மன் (கி.பி.575) மகேந்திரவர்மன் (கி.பி.600-630) போன்றவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள்.

இப்பல்லவ மன்னர்களில் புகழ் வேகத்தில் உயர்ந்து நின்றவன் மகேந்திரவர்மன். இவனுக்கு விசித்திர சித்தன் என்ற சிறப்புபெயரும் உண்டு. இதனோடு செந்தகாரி (கோயில் கட்டுபவன்),

சித்திரகாரப் புலி (ஓவியத்தில் புலி) என்ற விருதுகளையும் பெற்றான். (கே.கே.பிள்ளை தமிழக வரலாறும், மக்கள் பண்பாடும் ப.193).

கி.பி. ஆறாம் நூற்றாண்டில் சிம்ம விஷ்ணு என்பவன் அரசுரிமை ஏற்று, இலக்கிய வளர்ச்சியும், பண்பாட்டு மேம்பாடும் அரசியல் விரிவும் சிம்மவிஷ்ணுவின் காலத்திலிருந்தே தொடங்குகின்றன. இவன் களப்பிரரையும், சேர, சோழ, பாண்டிய, மன்னரையும், மாளவரையும், சிங்களவரையும், வென்று வாகை சூடினான் என்று காசக்குடி செப்பேடுகள் கூறுகின்றன. (கே.கே.பிள்ளை, தமிழக வரலாறும் மக்கள் பண்பாடும் ப.193)

பல்வேறு நிலையில் மொழி வரலாற்றில் பல்லவர்களின் காலத்திய பங்கு அளப்பரியது. தமிழரின் நாகரிகத்துக்கும், பண்பாட்டுக்கும் புறம்பட்டு, பின்னர் வடமொழியோடு, தமிழையும் ஆட்சி மொழியாக கொண்டனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. இவர்களின் முக்கிய நோக்காக இறை குடியிருக்கும் கோயில்களை அமைக்கும் பணியில் புதுவித நுட்பத்தைப் பயன்படுத்துவதில் முன்னோடியாக திகழ்ந்தனர்.

**குகைக்கோயில்கள்**

தனது ஆட்சிக்காலத்தில் பலவாறு புதுமைகளைச் செய்து, பின்னர் அரசர்கள் பின்பற்றும் வண்ணம் பல்லவ மன்னர் செயல்பட்டனர். அவற்றில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தி புதுமையை விளைவிக்க விரும்பினர். அதன் விளைவாக குகைக்கோயில்களை காலத்தால் சிதைவுறா நிலையில் அமைந்தனர். மகேந்திரவர்மன் மன்னன் தான் குகைகோயில் (பாறைக்கோயில்) ஏற்படுத்தினான். இக்கோயில்களில் புதுவித சிந்தனையூற்றோடு தூண்களையும், முன் மண்டபத்தையும் உள்ளே திருவுண்ணாழிகையும் (கர்ப்பக் கிருகத்தையும்) உருவாக்கும் புத்தம் புதிய திருப்பத்தை கட்டுமான அமைப்பியல் மாற்றத்தை ஏற்படுத்தியவன் இம்மன்னனே.

இவற்றில் குறிப்பிடத்தக்கது தென்ஆற்காடு மாவட்டம் விழுப்புரம் தாலுக்காவில், இரயில் நிலையத்திலிருந்து 13 மைல் தொலைவில் வடக்குப் பக்கத்தில் ஒரு குகைக்கோயில் அமைக்கப்பட்டுள்ளது. அக்கோயில் குறித்த செவ்வியல் முறைமையினை வடமொழி சாசனம் ஒன்று கூறுகிறது.

செங்கல் சுண்ணம் மரம் உலோகம் முதலியவை இல்லாமலேயே பிரம ஈசுவர விஷ்ணுக்களுக்கு விசித்திர சித்தன் என்னும் அரசனால் இக்கோயில் கட்டப்பட்டது (மயிலை சீனி. வேங்கடசாமி நாட்டார், தமிழர் வளர்த்த அழகிக் கலைகள் ப.24). இக்கால கட்டம் திருநாவுக்கரசர் காலமாக கொள்ளப்படுகிறது என்று திருச்சாரப்பள்ளி கல்வெட்டு கூறுகின்றது.

அடிப்படையில் சமணச் சமயத்தினராக இருந்து பிறகு திருநாவுக்கரசர் மீது ஈடுபாடு கொண்டு சைவ சமயத்தைத் தழுவினான் என்பதனை கல்வெட்டு ஆதாரங்கள் சான்றுக் காட்டுகின்றன.

குகைக்கோயில்கள் கட்டிடப்பணியில் புதியதொரு புரட்சியை உண்டாக்கி, சென்னை அடுத்த பல்லாவரத்திலும், திருச்சிராப்பள்ளி மலையிலும், மண்டகப்பட்டு மகேந்திரவாடி, சீயமங்கலம், மேலைச்சேரி, வல்லம், மாமண்டூர், தளவானூர், சித்தன்னவாசல் போன்றதொரு குகைக்கோயில்களை

மகேந்திரவர்மன் உருவாக்கினான்.

இம்மன்னனுக்கு பிறகு அவன் மகன் மாமல்லன் நரசிம்மவர்மனும், அவனுக்கு பின்னர் பரமேசுவரவர்மன் முதலியவர்களும் மாமல்லபுரம், சாளுவன் குப்பன் முதலிய இடங்களில் குகைக்கோயில்களையும், இரதக் கோயில்களையும் பாறைகளில் அமைத்தார் (மயிலை சீனி.வேங்கடசாமி நாட்டார் நரசிம்மவர்மன்).

சமணச் சமயம் தழைத்து வளர்ந்துற்ற கால நிலையில் திருச்சி மலைக்கோட்டையில் குகைக்கோயில் உருவாக்கப்பட்டு அதற்கு மேற்குகுடவரை என்றும் வரலாற்று ஆய்வாளர்கள் அழைக்கின்றனர். மகேந்திரனின் பிற்கால ஆட்சியில் சிவன்கோயிலாக மாறியுள்ளது. முகப்பு மண்டபம் நீள்சதுரமாகவும், கருவறை சதுர வடிவமாகவும் குடையப்பட்டு, மலையின் அடிவாரத்தில் கிழக்கில் ஒரு கோபுரமும் அமைத்துள்ளனர். இதற்கு கிழக்கு குடவரை என்று பெயர். இதுபோன்ற கோயில் கட்டடக்கலையின் சிறப்பை உணர்த்தி மற்றவர்களும் இவ்அமைப்பினை பின்பற்றுமாறு உருவாக்கப்பட்டுள்ளது.

**கற்கோயில்கள்**

''கற்றளி' என்பது கற்களை ஒன்றன்மேல் ஒன்றாக அடுக்கி கட்டப்படும் கோயில் கட்டடங்களுக்கு கற்கோயில் என்று பெயர். பல்லவ மன்னனின் நரசிம்மவர்மன் என்றொரு அரசனால் கட்டிடக்கலையில் புதியதொரு நுணுக்கத்தைக் கையாண்டான். பனைமலை, மாமல்லபுரம், கைலாசநாதர் கோயில் போன்ற கற்றளிகளை எழுப்பிவித்தான் என்றும், மாமல்லபுரச் சிற்பங்களும், கோயில்களும் ஒரே பாறையில் ஏறத்தாழ 1200 ஆண்களாகியும் நிலைத்து நின்ற நிலையில் உருவாக்கப்பட்டுள்ளன. (மயிலை சீனி.வேங்கடசாமி, தமிழர் வளர்ந்த அழகுக் கலைகள்).

பல்லவ மன்னனின் இறுதியாட்சியில் கட்டிய கோயில்கள் பெரும்பாலானவை கற்றளிகளே. இதன் நீட்சியாக காஞ்சிபுரத்தில் அமைக்கப்பட்டுள்ள கைலாசாதர் கோயில் பணிதான் சைவ சமயத்தில் பெரும் புகழையும், அழியாத இடத்தையும் பெற்றுக்கொடுத்து என்று பெரியபுராணம் கூறுகிறது. திருத்தொண்டர் தொகையில் கடைசியில் கழற்சிங்க நாயனாராகச் சேர்க்கப்பட்டுள்ள இந்த நரசிம்ம வர்ம பல்லவர்தான் என்பது குறிப்பிடத்தக்கது.

**கட்டுமான முறையில் புதுமை**

தொன்மைக் காலத்தில் மரத்தினால் எளிதாக கோயில்கள் அமைப்பது எளிது. இன்று அண்டை மாநிலமான கேரளாவிலும் இப்பணி தொடர்ந்து படகில் மரவீடு அமைக்கும்முறை தொடர்ந்திருக்கிறது. பின்னர் சங்ககால அரசர்கள் காலத்தில் செங்கற்களால் கோயில்கள் அமைக்கப்பட்டுள்ளன என்பதனை சங்க இலக்கியப் பாடல் நமக்கு சான்றாக காட்டுகிறது.

**இட்டிகை நெடுஞ்சுவர் விட்டம் வீழ்ந்தென**
**மனிப்புறாத் துறந்த மரஞ்சோர் மாடத்து**
**எழுதணி கடவுள் போகலிற் புல்லென்று**
**ஒழுகு பலி மறந்த மெழுகாய் புன்றினை (அகம். 167)**

என்ற பாடல் மூலம் அக்காலக் கோயில் கட்டப்பட்ட விதத்தை அறிய முடிகிறது. கடைச்சங்க காலத்தின் இறுதியில் சோழன் செங்கணான் சிவபெருமானுக்கும் திருமாலுக்கும் எழுபதுக்கும் மேற்பட்ட திருக்கோயில்களைச் செங்கல்லால் கட்டினான் என்பதனை தேவாரப் பாடல் மூலம் அறிய முடிகிறது. இக்கோயில்கள் சில நூற்றாண்டுகளுக்கு மேல் அழியும் நிலையை எட்டியதால் அழிக்கோயில்கள் என்று அழைக்கப்பட்டனர். இதையறிந்த பல்லவ மன்னர் வடமொழியில் ஆதரவோடு பாறையைக் குடைந்து கோயில் கட்டமைப்பு முறையை உருவாக்கித் தொடங்கினான் என்பது புலனாகிறது. குகைக்கோயில்கள் எல்லாம் பொதுவாக அரைவட்ட அமைப்புடையவை. மாமல்லபுரத்து குகைக்கோயில்கள் நீண்ட சதுரமுள்ள அகநாழிகையும், கணேசரதம் அமைப்பும் கொண்டது. பனமலையில் உள்ள கோயில் பல்லவர் காலத்து கோயில்கள் தரையமைப்பு மத்தியில் உள்ள அகநாழிகையைச் சூழ்ந்து நாற்புற அகநாழிகைகள் இருக்கின்றன.

காஞ்சிபுரம் கயிலாசநாதர் கோயில் (இராசிம்மேசுவரம்) தரையமைப்பானது மத்தியில் உள்ள அகநாழிகையைச் சூழ்ந்து வேறு அகநாழிகைகள் அமைந்துள்ளன. கயிலாசநாதர் கோயிலும், பனமலைக்கோயிலும், கருவறைச் சார்ந்து வேறுசில கருவறைகளும் அமைக்கப்பட்டுள்ளன. இவ்விரண்டும் அபூர்வமாக ஏற்பட்டவை. பல்லவர் அரசர் காலம் வரையில் திருவுண்ணாழிகையும், இடைநாழிகையும் (கருவறையும் அர்த்த மண்டபமும்) ஆகிய கட்டடங்களே அமைக்கப்பட்டுள்ளன. இவற்றைச் சூழ்ந்து வேறு மண்டபங்கள் பெரும்பாலும் அமைக்கப்படவில்லை.

கி.பி. 7ஆம் நூற்றாண்டுக்கு முன்னர் இருந்த செங்கற் கட்டங்களாலான மாடக்கோயில் மாதிரி பல்லவ அரசனான நரசிம்மவர்மன் (மாமல்லன்) மாமல்லபுரமாகிய மகாபலிபுரத்திலே கருங்கல்லினால் அமைத்திருக்கிறான். அவை இரண்டு, மூன்று நிலையுள்ள மாடக்கோயில்கள் மாதிரி ஆகும். இப்போதும் இரண்டு மாடக்கோயில்கள் அங்கு உள்ளன.

காஞ்சிபுரத்தில் உள்ள பரமேச்சுர விண்ணகரமும், உத்திரமேரூர் சுந்தர விரதப் பெருமாள் ஆலயமும் ஆகும். அப்போது உள்ள பரமேச்சுர விண்ணகரம் இப்போது வைகுண்டப் பெருமாள் கோயில் என்று அழைக்கின்றனர். கி.பி.8ஆம் நூற்றாண்டில் உத்திரமேரூரில் கட்டப்பட்டுள்ள மூன்று நிலை மாடக்கோயில்களும், நந்திவர்மன் உருவச்சிலையும் இக்கோயில் இடம்பெற்று இருக்கிறது.

**முடிவுரை**

பல்லவர்கள் கற்களை வைத்தும், பாறைகளைக் குடைந்தும் கோயில் கலையில் புதிய கோட்பாட்டு உத்திமுறையைக் கையாண்டு புத்தெழுச்சிப் பெற செய்துள்ளனர். சமணமும், பௌத்தமும் தழைத்தோங்கி நின்ற காலத்தில், சைவத்தையும், வைணவத்தையும், தமிழ்நாட்டில் நிலைப்பெறச் செய்தது இப்பல்லவர்களின் அறப்பணியே ஆகும். இக்கட்டிடக்கலை நுட்பம் இப்போது வடநாட்டில் காணப்படுவதாகத் தெரிகிறது. குகைக்கோயில்கள் ஒற்றைக்கல் கோயில்கள், கற்றளிகள் போன்றவற்றை அமைத்து வழிபாட்டு மரபிலும், கலைநுட்பத்தில் மிகச் சிறந்தோர் தாக்கத்தையும். புதுமையையும் ஏற்படுத்தியவர் பல்லவர்களே ஆவர்.

**துணைநூல்கள்**

1. இராசமாணிக்கனார் (1999) பல்லவப் பேரரசர் பூரம் பதிப்பகம், சென்னை.
2. பிள்ளை கே.கே. (2011) தமிழக வரலாறும், மக்கள் பண்பாடும், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், தரமணி, சென்னை.
3. வேங்கடசாமி .மயிலை, சீனி (2006) தமிழர் வளர்த்த அழகுக் கலைகள், பூம்புகார் பதிப்பகம், சென்னை.
4. வரதராசனார்.மு (2018) தமிழ் இலக்கிய வரலாறு, அண்ணாசாலை, தேனாம்பேட்டை, சென்னை.
5. தென்னிந்திய கோயில்கள், நேஷனல் புக் டிரஸ்ட், புதுதில்லி.